
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1216

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

117

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## மீண்டும் ஆளும் வரலாற்றை உருவாக்குவோம்!

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு, 1958-ஆம் ஆண்டு பிப்ரவரி 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. முதல் நாள் காலை 9.30 மணிக்கு, நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் இருந்து மாபெரும் ஊர்வலம் தொடங்கியது. மாநாட்டுத் தலைவரான பேராசிரியர் அன்பழகன், திறப்பாளர் எஸ்.எஸ்.இராசேந்திரன், வரவேற்புக் குழுத் தலைவர் சௌந்தரபாண்டியனார், வரவேற்புக் குழுச் செயலாளர் எஸ்.இராம வெள்ளையன் ஆகியோர் இரட்டைக் குதிரை பூட்டப்பட்ட சாரட்டில் அழைத்து வரப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் புடைசூழ, பேரணி காலை 11 மணிக்கு மாநாட்டுப் பந்தலை அடைந்தது.

தொண்டர்களின் பெரும் ஆரவாரத்துக்கு மத்தியில், கழகத்தின் இருவண்ணக்கொடியை ஏற்றிவைத்தார் பேராசிரியர். ஏ.வி.பி.ஆசைத் தம்பி வரவேற்புரை வாசிக்க, எஸ்.எஸ். இராசேந்திரன் மாநாட்டைத் திறந்துவைத்து உரையாற்றினார். "ஒன்றரைக் கோடிப்பேர் உள்ள பர்மா, 60 லட்சம் பேர் கொண்ட இலங்கை, அண்டையிலுள்ள மலேயா உரிமையுள்ள நாடுகளாக உலகிலே ஏறுநடை போடுகையில், 5 கோடி மக்கள் உள்ள திராவிடம் மட்டும் மாற்றான் கட்டளைக்குக் கைகட்டி, வாய் பொத்தி அடிமையாக இருப்பதா என்ற எழுச்சியால் உந்தப்பட்டு விட்டோம். ஆண்ட நாம், மீண்டும் ஆளுகின்ற வரலாற்றை உருவாக்க வேண்டும் - உண்டாக்கித் தீர வேண்டும்" என்று எழுச்சி உரையாற்றினார்.

அடுத்து, பேராசிரியர் தலைமை உரையுடன் பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் பிற்பகல் 3 மணிக்கு, வளர்மதி இசைக்குழுவினர் நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்கியது. அதன்படி மன்னார்குடி அறிவழகன், மஜீத் ஆகியோர் பாடல்கள் பாடினர். பின்னர், 'சட்டமும் நாமும்' என்ற தலைப்பில் இரெ.இளம்வழுதி, 'சட்டசபை அனுபவங்கள்' குறித்து ஏ.கோவிந்தசாமி, 'கலைஞன் தொண்டு' என்ற தலைப்பில் நடிகமணி நாராயணசாமி, 'பெண்கள் முன்னேற்றம்' என்ற தலைப்பில் மங்கையர்செல்வி, 'ஆந்திரத்தில் கழக வளர்ச்சி' பற்றி பி.எம்.கருணாகரன், 'தொழில் துறை ஆதிக்கம்' என்ற தலைப்பில் காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசினர். திராவிட மணி, நாஞ்சில் மனோகரன், வி.பி.ராமன் ஆகியோரும் தனித்தனி தலைப்பில் பேசினர். 'டில்லியில் நாம்' என்ற தலைப்பில் இறுதியாக ஈ.வெ.கி.சம்பத் பேசினார். அன்று இரவு கலைஞரின் 'உதயசூரியன்' நாடகம் நடைபெற்றது. புதுமை நாடக மன்றத்தாரின் நடிப்பில் நடைபெற்ற நாடகத்தில் கலைஞரும் நடித்தார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள், கிருஷ்ணவேணியின் பாடலுடன், காலை 9.30 மணிக்குத் தொடங்கியது. 'சேது சமுத்திர திட்டமும் இந்திய அரசியலாரும்' என்ற தலைப்பில் என்.வி.நடராசனும், 'மொழிப்பிரச்சினை' குறித்து எம்.எஸ்.இராமசாமியும் முக்கிய உரையாற்றினர். அமுதா, க.அறிவழகன், கே.ஏ.மதியழகன், சி.பி.சிற்றரசு, அ.பொன்னம்பலனார், ப.உ.சண்முகம், அருண்மொழி, கண்ணதாசன், இரா.செழியன், என்.எஸ்.இளங்கோ, சுபேர், சத்தியவாணி முத்து, கா.அப்பாதுரையார் ஆகியோரும் தனித்தனி தலைப்புகளில் பேசினர். அதன்பிறகு, கருத்துரிமை பறிப்பு கண்டனம், ஒன்றிய அரசின் வஞ்சனைப் போக்குக்குக் கண்டனம் என ஏழு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அதன்பிறகு, 'விடுதலை முரசு' என்ற தலைப்பில் உரையாற்றிய கலைஞர், வடநாட்டில் நடந்த ஊழல்களை எடுத்துக்காட்டிப் பேசினார். அதன்பிறகு, நாவலர் நெடுஞ்செழியன் பேசினார். இறுதியாக, பேரறிஞர் அண்ணா எழுச்சி உரையாற்றினார். கே.ஆர்.கிருஷ்ண வேணி, 'நாகூர்' ஹனீபா இன்னிசை நிகழ்ச்சிகளுடன் மாநாடு முடிவுற்றது.

...கூட்டம் திரளும்

## ஆவணப்படம் திரையிடலுக்குத் தடையா?

ஊடகவியலாளர் 'அறக்கலகம்' தவம் மற்றும் தமிழ்தாசன் ஆகியோர் இணைந்து தயாரித்து இயக்கிய மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் 'திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்' என்ற ஆவணப்படம், கடந்த பிப்ரவரி மாதம் சென்னை ஃபோர் பிரேம்ஸ் அரங்கில் வெளியிடப்பட்டது. அப்போது மூத்த ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், திரைப்படக் கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அதன் பின்னர், பல இடங்களில் அந்த ஆவணப்படம் திரையிடப்பட்டது.

அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்ட அந்த 'திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்'ஆவணப்படத்தை, புதுக்கோட்டையில் 'வீதி கலை இலக்கியக் களம்' என்கிற அமைப்பினர் திரையிட ஏற்பாடு செய்துள்ளனர். இந்த நிலையில், நிகழ்ச்சி நடப்பதாக இருந்த தனியார் அரங்கத்துக்கு வந்த காவல்துறையினர், "இதை நடத்தக் கூடாது" எனத் தடுத்துள்ளனர்.

அரங்க உரிமையாளர்களுக்குத் தொந்தரவு வேண்டாம் என தமிழ்நாடு அறிவியல் இயக்க அரங்கத்திற்கு நிகழ்ச்சியை மாற்றி உள்ளனர், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள். ஆனால், திடீரென அங்கும் வந்த காவல் துறையினர், ஆவணப்படத்தைத் "திரையிடக் கூடாது, மேலிட உத்தரவு" என்று கூறி, நிகழ்ச்சியைத் தடுத்துள்ளனர். "இது ஏற்கெனவே வெளியிடப்பட்ட படம்தான். யூடியூபில் (YOUTUBE) இந்த ஆவணப்படம் வெளியிடப்பட்டு 60 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர். இது ஒன்றும் ரகசிய நடவடிக்கை இல்லை. நீங்களும் வேண்டுமானால் அமர்ந்து பாருங்கள்" என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எடுத்துச் சொல்லியும் காவல் துறை கேட்கவில்லை. கடைசியில் ஆவணப்படத் திரையிடல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

'பிப்ரவரி 2026 முதல் தேர்தலுக்கு முன்வரை பலமுறை இந்த ஆவணப்படத்தின் தனியார் திரையிடல் நடந்துள்ளது. எந்தச் சிக்கலும் எழுந்ததில்லை. இப்போது, திரையிடல் கூடாது' என்பதற்குக் காரணத்தை எழுத்துப் பூர்வமாகத் தரவும் மறுத்துள்ளது காவல் துறை. 'புரிஞ்சுக்கோங்க சார், மேல இருந்து உத்தரவு' என்று காவல் துறை சொன்னதன் பொருள் என்ன? கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் இந்தச் செயலுக்கு ஜனநாயக சக்திகள் கண்டனத்தைத் தெரிவித்துவருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்

### கழகத்தில் பயணிப்பதில் பெருமை!



தமிழ் இனத்திற்காகவும் உரிமைக்காகவும் ஓய்வின்றி உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் ஐயாவை, 2003-ஆம் ஆண்டில் 5-வது முறையாக சந்தித்துப் பேச வாய்ப்பு கிடைத்தது.

கோபாலபுரம் வீட்டில், முதல் மாடியில் பார்த்தேன். தலைவர் அவர்கள் என்னைப் பார்த்து, 'என்னய்யா' என்று கேட்ட அந்த ஒரு வார்த்தை என் நெஞ்சிலே நிலைத்துள்ளது. 'உங்களோடு ஒரு போட்டோ எடுத்துக்கணும் அய்யா' என்றதும், 'எடுத்துக்கய்யா' என்றார். 1992-லிருந்து கழக உடன்பிறப்பாக 34-ஆண்டு காலமாக கலைஞரால் கழகத்திற்கு ஈர்க்கப்பட்ட நான், இன்றளவும் கழகக் கொள்கைகளோடு பயணிப்பதைப் பெருமையாக நினைக்கிறேன்.



சி.அமலதாஸ்.

**- சி.அமலதாஸ்,**
**வட்டத் துணைச் செயலாளர், 176(அ) - வட்டம்,**
**வேளச்சேரி மேற்குப் பகுதி, சென்னை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

117

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## அறிவுப்படை திரளட்டும்!




தி.மு.க. சார்புடைய இளம் தலைமுறையினர், கழகத்திற்கு ஆதரவாக சமூக வலைதளத்தில் களமாடும் வகையில், இளைஞர்கள் மட்டும் கூடும் ஒரு சந்திப்பை 'GENZ DMK சந்திப்பு' என்ற பெயரில் ஏற்பாடு செய்தனர். முதலில் குறைந்த அளவிலான இளைஞர்களே கூடி சந்திக்க இருந்த இந்த நிகழ்ச்சி, நல்ல வரவேற்பைப் பெற்று 400-க்கும் அதிகமானோர் விருப்பம் தெரிவித்த காரணத்தால் உள்அரங்குக்கு மாற்றப்பட்டது.

இன்றைய ஆளும் அரசின் சார்பில் இக்கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்படவே, இக்கூட்டம் ஓர் இளைஞர் இயக்கமாக உருவெடுத்து, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் திரண்டது. ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் திரண்டு, பெருவாரியான ஆதரவை வழங்கினர்.

தடைகள் விதிக்கப்பட்டால், அதை மீறிச் செயலாற்றுவதும், அடக்குமுறைகளை அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்கொள்வதும் தி.மு. கழகத்திற்குப் புதிதல்ல. அதுவும் தி.மு.க.வின் இளைஞர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் துணிச்சல் மிகுதி.

1953-ஆம் ஆண்டு தி.மு.கழகம் முன்வைத்த அரசியலுக்காக, அன்றைய காங்கிரஸ் அரசாங்கத்திடம் இருந்து எதிர்கொண்ட ஒடுக்குமுறைகளை எல்லாம் பதிவுசெய்து, அதிலிருந்து மீள ஆலோசனைகளையும் வழங்கி இருக்கும் நூல், 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி எழுதிய 'நடமாடுங் கல்லூரி'. 'முரசொலி பதிப்பகம்' இந்நூலை வெளியிட்டிருக்கிறது.

இந்நூலில், தி.மு.க. சந்தித்த ஒடுக்குமுறைகளையும் அதற்காக எதிர்கொண்ட இழப்புகளையும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், தி.மு.க.வினர் முழுநேர அரசியலில் இல்லாத நேரத்தில்கூட, ஓய்வு நேரத்தில் மக்களிடம் பிரச்சாரம் செய்து, அவர்களின் மனங்களில் முற்போக்கு எண்ணம் ஏற்படச் செய்யும் அளவுக்கு திறன் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் ஆசைத்தம்பி அவர்கள் இதில் கவனப்படுத்துகிறார்.

அறிவுப் பிரச்சாரம் செய்வதாலேயே, தி.மு.க.வினர் நடமாடும் கல்லூரியாகத் திகழ்ந்தனர். அத்தகைய அறிவுப் பிரச்சாரத்தின் மூலம் பேரறிஞர் அண்ணா, தன் தம்பிகளை அறப்போருக்குத் தயார் செய்தார்.

தி.மு.க.வினர் தங்களது கொள்கையை முழங்கியதற்காக உடையார்பாளையம் வேலாயுதம், நெல்லிக்குப்பம் மஜித், சென்னையில் பாண்டியன் போன்ற இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தேனி, கம்பம், கமுதி போன்ற ஊர்களில் பல கலகங்கள் நிகழ்த்தப்பட்டன. இவை அனைத்தின் பின்னணியிலும் அன்றைய ஆளும் அரசின் கை இருந்தது என்பதை ஆசைத்தம்பி வெளிப்படையாகத் தெரிவிக்கிறார்.

திராவிடம் எனும் கொள்கையைப் பேசுபவர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டோர் எனும் விமர்சனத்திற்கு எதிராக, அந்தக் கொள்கையும் அக்கொள்கையைப் பேசுவோரும் கொண்டிருந்த பரந்த மனப்பான்மையை உதாரணமாகக் காட்டி மறுக்கிறார்.

காலங்கள் மாறலாம். ஆனால், ஆளும் தரப்பினர் நம் மீதும் நாம் பேசும் கருத்துகள் மீதும் நிகழ்த்தும் அடக்குமுறைகள் மாறிய தில்லை. GENZ DMK சந்திப்பையும் அப்படி முடக்க நினைத்துத்தான் ஆளும் தரப்பார் தோல்வியடைந்துள்ளனர்.

ஆசைத்தம்பி அவர்களின் வரிகளில் சொல்ல வேண்டுமென்றால், "அறிவுப்படை திரளட்டும் - அறப்போர் நடத்திட முதலில் அறிவுப்படை திரள வேண்டும், திரட்டப்பட வேண்டும், நாடெங்கும்."

...வாசிப்போம்.

## கருவூலம்

### என் தோழர்களே, நான்!

1966-ஆம் ஆண்டு, டிசம்பர் 29 முதல் ஜனவரி 1 வரை நடைபெற்ற சென்னை விருகம்பாக்கம் தேர்தல் மாநாட்டில், பேரறிஞர் அண்ணா தலைமை உரையாற்றினார். "என் கூட்டுத் தோழர்கள் சிந்திய வியர்வை, இந்தக் கழகம். நான் வேறு, என் தோழர்கள் வேறு அல்ல; அவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்தால், நான். என்னைப் பிரித்துப் பார்த்தால், அவர்கள். இங்கிருந்த காட்டை அழித்தது பெரிதல்ல; தேவையற்ற எண்ணக் காடுகளை அழியுங்கள்" என்று அவர் ஆற்றிய உரை, கழகத்தினரை உணர்வுப்பெருக்கில் ஆழ்த்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900